DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI

C.C.No.24/12

Deposition of Witness: PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | கே.ஜே.வர்கீஸ் | Father's Name | |
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.02.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது பெங்களுரில் குடியிருந்து தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அசா1ஐ தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 2,3 எதிரிகளையும் எனக்கு தெரியாது. 2003 ஜனவரி முடிவில் ஒரு வாரம் மெடிக்கல் லீவில் இருந்தேன். 2003 வருடம் தான் சம்பவம் நடந்தது. மே மாதம் 25ம் தேதி வரை நான் மேல்அதிகாரியின் அனுமதியுடன் பிரான்ஸ் சென்றிருந்தேன். அந்த நேரத்தில் பொறுப்பில் இருந்த தலைமை ஆசிரியர் பதில் அனுப்பியிருந்தார். நான் மீண்டும் பணிக்கு திருப்பியபோது மண்டல் இயக்குநருக்கு ஆவணங்களை பார்த்து நான் பதில் அனுப்பினேன். ஆனால் அதில் இரண்டு முக்கியமான விசயங்கள் இருந்தது. ஒன்று எங்கள் பள்ளியின் முத்திரை இல்லை. அந்த சீலில் எழுத்து பிழை இருந்தது. மேலும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. எதிரி விண்ணப்பித்த விண்ணப்ப படிவத்தில் உள்ள கையெழுத்து மற்றும் முத்திரையும் வேறுபாடு உள்ளது. இது பற்றி நான் மண்டல இயக்குநருக்கு அனைத்து தகவல்களையும் தெரியப்படுத்தினேன். அதன்பின்பு எனக்கு எந்த தகவலும் இல்லை நான் மாறுதலாகி சென்றுவிட்டேன். அது சம்மந்தமாக என்னை அப்போது போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரங்களை கூறினேன்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் மெடிக்கல் லீவில் இருந்த விபரம் மற்றும் வெளிநாடு சென்றதை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பள்ளியில் அனுமதி பெற்று வெளிநாடு சென்றதற்கான ஆவணத்தை நான் போலிசாரிடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இது பற்றி கேட்கவில்லை நான் தாக்கல் செய்யவில்லை.

மண்டல இயக்குநரிடம் தபால் எனக்கு தான் நேரடியாக வந்ததா என்றால் எனக்கு தான் வந்தது நான் வெளியூரில் இருந்தால் என் பொறுப்பில் உள்ளவர்கள் வாங்கியிருப்பார்கள். அலுவலக முத்திரையில் எழுத்து பிழை இருந்த விபரத்தை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மண்டல இயக்குனருக்கு நான் தபால் அனுப்பிய விபரத்தையும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சம்பவ சமயத்தில் நான் என்ன பணியில் இருந்தேன் என்பதற்கான ஆவணத்தை போலிசார் விசாரணையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் கேட்கவில்லை நான் தாக்கல் செய்யவில்லை. அனைத்து விபரங்களும் மண்டல அலுவலகத்தின் வழியாக தான் வரும். என்னுடைய முன்பாக என் பள்ளியில் இருந்து எந்த ஒரு ஆவணங்களும் முத்திரைகளும் போலிசார் கைப்பற்றி செல்லவில்லை என்றால் சரிதான். இந்த விசயமாக மண்டல இயக்குனர் அலுவலகத்தில் என்னை நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். தாபல் மூலமாக நாங்கள் பதில் அனுப்பினோம். மண்டல இயக்குனர் அலுவலகத்திற்காக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மண்டல அலுவலகத்திற்கு அனுப்பி தபாலின் நகலை நான் என்னை போலிசார் விசாரிக்கும் போது காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். அச்த சமயத்தில் எங்கள் பள்ளியில் 63 பேர்கள் பணியில் இருந்தார்கள். ஆவணங்களை பராமரிக்க தனியாக எங்கள் பள்ளியில் அலுவலர்கள் உண்டு என்றால் சரிதான்.